உ

சிவமயம்.

சகாதேவர் அருளிச்செய்த

தொடுகுறிசாஸ்திரம்.

111	112	113	114	121	122	123	124
131	132	133	134	141	142	143	144
211	212	213	214	221	222	223	224
231	232	233	234	241	242	243	244
311	312	313	314	321	322	323	324
331	332	333	334	341	342	343	344
411	412	413	414	421	422	423	424
431	432	433	434	441	442	443	444

பி. நா. சிதம்பரமுதலியார்

பிரதர்ஸ் அவர்களது

சென்னை,

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1924.

இதன்விலை அணா—2.

உ

கடவுள் துணை.

நூன் முகம்.

விருத்தம்.

பூலோக மானிடர்கள் பிழைக்கவேண்டி பொய்யுரையா பாண்டவருக் கிளையதம்பி, சாலோகசாஸ்திரமுந் தெரிந்தஞானி சாஸ்திரத்தின்கொடியுடைய சகாதேவன் தான், கார்காலத்தினுட நிலைமைகாண கார்மேகவண்ணனது கருணைகொண்டு, மேலான தொடுகுறியை மொழிந்ததாலே மேதினியிலேகாம்பரம் வெளியிட்டானே.

சாமியென்று ளுள்ளன்பு யிருக்கவேண்டும் சக்ரவர்த்தியானாலும் பக்திவேணும், காமிகளாய் திரிபவர்க்கு வெட்கமில்லை கைகண்ட தொடுகுறியே கடப்பதில்லை, பூமியிலேயின்றால்தான் வெளிவந்தாலும் புத்தியில்லாமூடருக்குப் புலப்படாது, வாமியுடமூத்தவனா ரருளினாலே வரைந்திட்ட சகாதேவன் வாக்கைப்பாரே.

பாரப்பாவாக்குநிலை கண்டபோதும் பந்தயமாய்மாயச்சூதாடும் போதும், தூரப்பாதுகிலதனை யுரியும்போதும் துணையிழந்து வனவாசம் போகும்போதும், சீரப்பாவிராடனிடம் சேரும்போதும் சிற்றமராய் மாடுபிடிசண்டைபோதும், ஆரப்பாகார்மேகன் காப்பேனென்று அருகிருந்துசொன்னதோர் குறியிதாமே.

தொடுகுறியின் சாஸ்திரத்தின் துணையினாலே தொல்லுலகைப்பரி கொடுத்தே துஞ்சவில்லை, விரிவானதொடுகுறியின் வலுவினாலே வனவாசம் சென்றவரும் வாடவில்லை, படியின்மிசை சகாதேவனெழுதி வைத்த பாங்கான கணிதவகை தொண்ணூற்றாறில், அடைவான்தொடுகுறியே போதுமென்று அன்புடனேநாதாக்க ளெடுத்திட்டாரே.

நாதாக்களெடுத்தமொழி பொய்யாகாது நம்பாதமடையருக்குமெய்யாகாது, வேதாந்தஞானி சகாதேவனாலே விளம்பியவித்தொடுகுறியோ வீண்போகாது, ஆதாரமிதைவிடவே நிணங்கிட்டாது அண்டசராசரத்திற்கு மெத்தநூலாம், தீதுடனே நன்மையிரண்டுந் தெரிந்துகொள்ள தெளிவாகவிவரமதை தெரிவிப்பேனே.

தெரிந்திடவேவட்டமாய் மெழுகிமைந்தா தெரிவையர்கள்மஞ்சளினால் கணேசன்வைத்து, அருகினிலேதாம்பூலம் கதலிவெல்லம் மணுவேணும்கற்பூரம் கொளுத்திவைத்து, பருவாகநீவணங்குங் குலதெய்வத்தைப் பாண்டவரைச் சிந்தையிலேபதியவைத்து, சிறுபயலாங் கன்னியிடம் மலரையீந்து சக்கரத்திலெதுவேணுந் தீண்டச்சொல்லே.

தீண்டியதோர்லக்கமதை குறித்துக்கொள்ளு தெய்வமொழிப் பாட்டிதனைத்தேடிப்பாரு, வேண்டியேதொட்டதொரு லக்கம்போலே வருகின்றசெய்யுள்தனை வாசித்தாக்கால், காண்டீபன்தம்பியுடகருணையாலே கலக்கமதுவிலகுமடா கண்ணாடியபோல், பாண்டவர்கள் தொகுதியைப் பரீட்சிப்போர்க்கு பத்தினிதுரோபதை கிருபை பலிக்குமம்பாரே.

நான்முகம்-முற்றிற்று.

சீதாசக்கரம்.

1	7	8
3	2	6
5	9	4

1-லாபம்.	4-பீடை.	7-தனம்.
2-நாசம்.	5-க்ஷேமம்.	8-மரணம்.
3-சிநேகம்.	6-கலகம்	9-பிரீதி.

இந்த சீதாசக்கரத்தில் கண்டநெம்பரை ஒரு சிறுவனைக் கைகால் சுத்திசெய்து வரச்சொல்லி ஒரு புஷ்பங்கொடுத்து நெம்பரை பூணச்சொல்லி பலன்களைத் தெரிந்துக்கொள்ளவும்.

உ

சகாதேவர் அருளிச்செய்த

தொடுகுறி சாஸ்திரம்.

நன்மைதீமை அறியும்படியான சக்கரம்.

111	112	113	114	121	122	123	124
131	132	133	134	141	142	143	144
211	212	213	214	221	222	223	224
231	232	233	234	241	242	243	244
311	312	313	314	321	322	323	324
331	332	333	334	341	342	343	344
411	412	413	414	421	422	423	424
431	432	433	434	441	442	443	444

விருத்தம்

பேர்வளர்ஆரென்னும் சாஸ்திரத்தில்
பேசியதோர்தொடுகுறியின் பெருமைகேளீர்
சீர்வளரும்ஐவருக்கும் இளையதம்பி
சிரஞ்சீவிசகாதேவர் சொன்னவாக்கு
கார்வளர்போல் கண்டுமனந்தெளிவதற்கு
கருணைமொழிசிவனயன்மால் குகனுஞ்சாட்சி
தார்வளர்மேல்இப்பொருளை வெளிதாய்ச்செய்ய
தகுபஞ்சபாணிசுதன் காப்புதானே.

காப்பு விருத்தம்.

பஞ்சபாண்டவரின்பாதம் பலதினமறவாய்போற்றி
துஞ்சமாயெவர்க்குநன்மை தொடுகுறிநூலைசொல்ல
செஞ்சிமாநகரம்வாழும் சிறுவணேகாம்பரன்தானும்
தஞ்சமாய்குருவின்பாதம் தாள்பணிந்தேற்றினேனே.

நூல்.

111 - வது

அரியவே நூத்திபதிமூன்றைத்தொட்டாய்
அப்பனேகேழ்க்குமொரு செய்திகேளு
குறைவின்றிகாரியங்கள் ஜெயமேயாகும்
கொற்றவனேஒருவருடம் குறைவேயில்லை
பொருமையுடன்யெதிரியைநீ வெல்வாயப்பா
பேசியதோர்நாள்கிரகம் வீட்டுநன்மை
குருமொழிபோல்சொன்னகுறி வுண்மைகாண
குறிப்புண்டுவலதுதோளில் மச்சம்தானே.

வ-ம். நீ நினைத்தகாரியம் ஜெயமாகும் எதிரியை நீ வெல்வாய் தொட்டவேளையும் நன்றாயிருக்கிறது உன் வீட்டுக்காரியமும் ஜெயமாகும் இந்தராசி உனக்கு ஒருவருடம் குறைவில்லாமல் இப்பாய் இதற்கடையாளம் வலதுபுயத்தின்மேல் மச்சமிருக்கும்பார்க்கவும்.

112-வது.

நன்மையென்றயோசனை மனதிலெண்ணி
நாட்டமாய்நூத்திபனி ரெண்டைதொட்டாய்
உன்னுடையமனம்போலே முடியாதப்பா
ஒருவராக்ஷேபனையாம் திண்ணமாகும்
மன்னவனேவுன்மனைவி உளவுமுண்டு
மாகாளியுருவமதை படைத்தமாது
தன்மையாய்மனம்போலே நடப்பதற்கு
தளராமல்தேவதைக்கு பூசைபோடே.

வ-ம். நீ நல்ல காரியத்தை மனதில்நினைத்துதொட்டதால் அந்த காரியங்கைகூடாது அது ஏனென்றால் உன்பெண்சாதி நடுவில் தூதாயிருக்கிறாள் ஆனபடியால் அந்தகாரியம் தாமிஷத்தில் கூடும் குலதேவதைக்கு பூசைபோடு பலிக்கும்.

113-வது.

கேளப்பாநூத்திபதி மூன்றைதொட்டாய்
கண்மணியேகேழ்க்குமொரு சேதிகேளு
தாளப்பாபுத்திரர்கள் தழைத்துவாழ்வாய்
தனலாபங்குறைவில்லை மிகவேயுண்டு
மீளப்பாஜெயகால முதவியாச்சி
மைந்தனேபடுந்துன்பம் விலகிப்போச்சி
கேளப்பாசொன்னமொழி நம்பிப்பாரு
கிருபையொடுகுருமுனியுங்காப்புதானே.

வ-ம். நீதொட்டகுறி தனலாபங்கிடைக்கும் புத்திரபாக்கியமுண்டு மனக்கவலைநீங்கி சந்தோஷமடைவாய் உனக்கு கிரகங்கள் நல்லதாயிருக்கிறது அதனால் சுகமுண்டு உத்தமம்.

114-வது.

மைந்தனே நூற்றிபதினாலேதொட்டாய்
மகாநன்மைவருத்தமதுவிலகிப்போச்சு
சிந்தையதுகளித்திடுவாய் லாபமுண்டு
சீமான்போலுனக்கொருவர்உதவியாவார்
வந்திடுவார்பின்னமூன்றுமாதத்தின்மேல்
வளமாககுருவுனக்குப்பலனைக்கூட்ட
இந்தவிதம்யார்சொல்வார்சித்தர்சொல்லார்
இயம்பியசகாதேவர் நூலைநம்பே.

வ-ம். நினைத்தகாரியம் நன்மையாகும் அது ஒருசினேகிதனால் உதவியாகும் லாபங்கிடைக்கும் உனக்குபின்னம் மூன்றுமாதத்தின் மேல் குருநல்லவனாகவருவார் உத்தமம்.

121-வது.

தொட்டதொருலக்கினத்தின்விபரங்கேளு
தொல்லையெனமனவருத்தம்விலகிப்போச்சு
இஷ்டகுலதேவதைக்குபூசைபோடு
யெதிர்படவேசினேகிதரால்உதவியாகும்
நட்டமில்லைவியாபாரம்பலிக்குமப்பா
நயமென்றேவுன்மொழியைநம்புவார்கள்
கெட்டியென்றேமுன்னோர்கள்சொன்னவாக்கை
கண்மணியேநம்பியுந்தன்கவலைதீரே.

வ-ம். தொட்டலக்கத்தில் மனவியாகூலந்தீரும், ஒருசினேகிதனால் உதவியுண்டு லாபங்கிடைக்கும் குலதேவதைக்கு பூசைபோடவும் சகலமுங்கைகூடுமென்று முன்னோர்கள் கூறுகிறார் உத்தமம்.

122-வது.

நூற்றுடனேயிருபத்திரெண்டைத்தொட்டீர்
நம்பியதோர்வியாபாரம்பலிதமாகும்
தோற்றதொருபொருளெல்லாம் வந்துசேரும்
துணையென்றுஒருவரையும்நம்பவேண்டாம்
தேற்றியதாய்உன்மனங்கள்ருசிக்கப்பேசி
நஷ்டமதைவைத்திடுவார்சினேகரப்பா
பார்த்திடுவாய்சொன்னமொழிநம்பிநீயும்
பாலகனேஇதன்பரிட்டைப்பாரின்மீதே.

வ-ம். நீநினைத்தகாரியம் பலிக்கும் வியாபாரம் விர்த்தியாகும்கை விட்டுப்போனபொருள் வந்துசேரும் சினேகிதரை நம்பவேண்டாம்நல்லவராகிப்பேசி மோசஞ்செய்வார்.

123-வது.

துன்பமதுவுன்னைவிட்டுவிலகிப்போச்சி
தொட்டதொருகுறி யினிடநன்மையாலே

பின்புமுறுபந்துக்குஆகாச்செய்கை
பிருக்குதப்பாவுன்னிடத்தில்விட்டுநீக்கு
தென்புறவேயின்னமைந்துதினத்திற்குள்ளே
துலவிருந்துசேதிகண்டுமகிழப்போறாய்
அன்புறவேயினியுனக்குகுறைவேயில்லை
ஆதிசிவன்சாட்சியதாயுரைக்கேளே.

வ-ம். இப்போது தொட்டகுறியால் மனக்கவலைதீரும் ஆனாலுன்னிடத்திலொரு கெட்டசெய்கையிருக்கிறது அதினாலுன்னுடைய பந்துக்களுக்கு விரோதமாயிருக்கிறாய் அந்தசெய்கையை நீக்கிவிட்டாலின்னமைந்துதினத்திற்குள் துல்விலிருந்துநல்லசேதிவரும் சந்தோஷப்படுவாய்.

124-வது.

அஞ்சாதேதொட்டதொருகுறியைக்கேளு
அப்பனேயினியொன்றுங்குறைவேயில்லை
வஞ்சனைசெய்கையாளர்உறவேயாவார்
வகைதப்பிப்போனபொருள்வந்துசேரும்
நெஞ்சதனில்நினைத்ததொருயெண்ணங்கூடும்
நினைக்கவேசெய்தொழிலும்லாபங்காணும்
கொஞ்சநாள்கழியயிவ்வருடங்கூடும்
குருமுனியும் சாட்சியதாய்கூறினேனே.

வ-ம். நீதொட்டகுறி நூற்றியிருபத்தினாலானகையால் இனிவுனக்குகுறைவில்லை பகையாயிருந்தவர் உறவாகுவார்கள் உன்னைவிட்டுப்போனபொருள்வந்துசேரும செய்தொழிலில் லாபங்கிடைக்கும் நினைத்தகாரிய மிந்தவருஷம் கைகூடும் குலவிர்த்தியாகும் உத்தமம்.

131-வது.

தொட்டகுறிநூத்திமுப்பத்தொன்றதாலே
தோஷமில்லையெண்ணமது முடியுமப்பா
விட்டுதப்பாநவக்கிரகம்பூசைசெய்ய
வெகுநாளாஉன்னைதொட்டபீடையெல்லாம்
பொட்டெனவேபெண்ணொருத்திசினேகமாவாள்
பொருளுடனேலாபம்வரும்கவலைவேண்டாம்
இட்டமுடனிந்நூலைநம்பினோர்க்கே
யென்னாளும்குறைவில்லையென்றார்தானே.

வ-ம். நீதொட்டகுறியால் ஜெயமாகும் பெருத்த ஆலோசனைபண்ணியிருக்கிறாய் அது ஒருபெண்ணால்முடியும் நீநவக்கிரகபூசைசெய்துவரவும் ஜெயமாகும் உத்தமம்.

132-வது.

மத்திபம்நூத்திமுப்பத்திரண்டில்
மனவருத்தம்தொட்டகுறிபொருளும்நஷ்டம்

சித்தமும்கலக்கமாய்வியாதிசேரும்
செய்தொழிலுங்கைவிட்டுசோருமப்பா
உத்தமனேவுன்மனைவிபகையாளாவாள்
உலகமகிழ்தொடுகுறியின்வுண்மைசொன்னேன்
முத்திபெற்றமுன்னோர்கள்சொன்னநூலை
மூடரல்லோபொய்யென்றுமொழிகுவாரே.

வ-ம். நினைத்தகாரியம் ஆகாது பொருள் நஷ்டம்வரும் திரேகம் அசௌக்கியமாய் வியாதிதரும் உன்பெண்சாதி பகையாவாள் செய்தொழிலில் கைவிட்டுபோகும் மத்தியம்.

133-வது.

காணவேநாத்திமுப்பத்திமூன்று
கண்மணியேதொட்டதினால் நன்மையுண்டு
வேணபெரியோராலேஉதவியாகும்
வருகுமொருவெதிரியைநீ வெல்வாயப்பா
தோணவேயுந்தன்குல தேவதைக்கு
தொழுதுமேபூசைசெய்து வந்தாயானால்
பூணவேலாபமுண்டு வீட்டுநன்மை
புண்ணியனேசொன்னமொழி நம்பிப்பாரே.

வ-ம். நீ நினைத்தகாரியம் ஜெயமாகும் ஒரு பெரியமனுஷருதவியாவார் உன் எதிரியைவெல்வாய் அதன்றியம் வீட்டுக்காரியமும் நன்மையாகும் குலதேவதைக்கு பூசைபோடவும் உத்தமம்.

134-வது.

அறியவேநூத்திமுப் பத்தினாலே
அப்பனேதொட்டதொரு செய்திகேளு
தெரியவேவியாபாரம் விர்த்தியாகும்
தங்குகின்றதிரேகத்தின் பீடைநீங்கும்
வருகுமொருவெதிரிகளும் விலகிநிற்பார்
வையமிசைபுத்திரரை பெற்றுவாழ்வர்
குருமொழிபோல்சகாதேவர் சொன்னவாக்கு
குவலயத்தில் கண்டுமனமகிழுவீரே.

வ-ம். நினைத்தகாரியம் ஜெயமாகும் வியபாரவிர்த்தியாகும் உன்னெதிரிகளெல்லாம் விலகிப்போவார் உன்திரேக பீடையுமொழியும் புத்திரபாக்கியம் முண்டாகும் இதுகளெல்லாம் நாளுக்கு நாள் கை கூடும் உத்தமம்.

141-வது.

எண்ணிவந்தவிவாகமது கூடுமப்பா
இசையவேநீதொட்ட குறியினாலே
பண்ணவேலாபம்வரும் கவலைவேண்டாம்
பகையாளர் அண்ணன்தம்பி வுரவேயாவார்

கண்மணியேபந்துஜெனம் உறவேயாவார்
கட்டமில்லையெத்தொழிலும் பலிக்குமப்பா
கண்மணியேஒருவரிட சகாயம்வேண்டாம்
கருத்ததுபோல்நடத்திமனக் கவலைதீரே.

வ-ம். நீ தொட்டகுறி நூத்திநாற்பத்தி யொன்றாகையால்நினைத் துவந்தகல்யாணகாரியம்முடியும் தனலாபங்கிடைக்கும் பகையாயிருந்த அண்ணன் தம்பிகள் உறவாவார்கள் பந்துஜனம் உதவியாகும் தைரியம்விடவேண்டாம் ஒருவர் தாட்சணியமில்லாமல் நடத்தலாம் ஜெயமாகும் உத்தமம்.

142-வது.

சீராகதொட்டகுறி செய்திகேளு
சொல்வதுபெருகுமட விவாகம்கூடும்
தோராமல்வாழ்ந்திடுவாய் துணிவாய்நீயும்
துணைகொண்டசிநேகிதனை நம்பவேண்டாம்
நேராகமுன்னொருநாள் மோசம்போனாய்
நாட்டமதைவீட்டின்மேல் நீயும்வைத்தே
பேராகஅம்மனைநீ பூசைசெய்ய
பலிக்குமடாசகலமும்நீ பயப்படாதே.

வ-ம். நீ தொட்டலக்கம் நூத்திநாற்பத்திரண்டாகையால் தனலாபங்கிடைக்கும் விவாகங்கூடும் ஆனால் நீ ஒருசிநேகிதனை நம்பியிருக்கிறாய் அவன் கெட்டயெண்ணம் வைத்திருக்கிறான் அவனை நம்பவேண்டாம் அதேனென்றால் நீ முன்னொரு தடவை மோசம் போயிருக்கிறாய் வீட்டுக்கியாபகமாயிரு அம்பனை பூசைசெய்யசகலமும் நன்மையாகும்.

143-வது.

நூத்திநாற்பத்திமூன்றை நம்பிநீதொட்டதாலே
தோற்றிடும்பொருளுஞ்சேரும் தர்மவான்சிநேகமாவான்
தோற்றியகஷ்டந்தீரும் திரவியலாபமாகும்
ஆத்திரப்படவேவேண்டாம் அம்மனைபூசைசெய்யே.

வ-ம். நினைத்தகாரியம் ஜெயமாகும் நல்லதர்மமுள்ள சிநேகிதரால் உதவியுண்டு மனக்கவலைதீரும் தனலாபங்கிடைக்கும் நீ உன்னுடைய குலதேவதைக்கு பூசைபோட சகலமுங் கைகூடும்.

144-வது.

கண்மணியே நூத்திநாற் பத்துநாலை
கருத்துடனேதொட்டதினால் வருத்தமில்லை
பண்ணவேபெரியோரால் உதவியுண்டு
பலமானஉத்தியோகங் கிடைக்குமப்பா
எண்ணங்கள்வெவ்வேறா எண்ணவேண்டாம்
யெத்தொழில்நீசெய்தாலும் பலனேகாணும்

திண்ணமென்றுமூடரல்லோ இதனைசொல்வார்
தெரிந்தவர்க்குயிந்நூலே சிரேஷ்டந்தானே.

வ-ம். நீநினைத்தகாரியம் ஜெயமாகும் ஒருபெரியமனுஷரால்உதவியாகும் பலமானவுத்தியோகங்கிடைக்கும் வியாபாரம் விர்த்தியாகும் தனலாபங்கிடைக்கும் வீட்டுக்காரியஞ் செயமாகும்.

211-வது.

சித்தத்தில்நினைத்ததொரு எண்ணங்கூடும்
ஜெயமாகுங்குடும்பமது விர்த்தியாகும்
புத்திரருமிகப்பெறுவாய் பொருளுஞ்சேரும்
போரனென்றவெளியூரின் ஆசைநீக்கி
உத்தமனேவுன்னிடத்தில் தேவபூசை
உறுதிகொண்டயெண்ணத்தால் போகொணாது
பத்தியாய்நாற்பத்தி ஐந்துநாளும்
பாலகனேஒழியவகை கூடும்பாரே.

வ-ம். இருநூத்தி பதினொன்றைதொட்டதால் நினைத்தகாரியங்கைகூடும் குடும்பவிர்த்தியாகும் புத்திரலாபமுண்டு ஆனால் நீவெளியூர்போக எண்ணங்கொண்டிருக்கிறாய் அதுகூடாது ஏனென்றால் உன்னிடத்தில் தேவபூசையிருக்கிறது அதினால் இன்னம்நாற்பத்தைந்துநாள் கழிந்தால் கைகூடும் உத்தமம்.

212-வது.

மன்னவனேநீதொட்ட லக்கத்தாலே
மனவருத்தமதுநீங்கி மகிழ்ச்சியாக
சொன்னபடிபொருள்சேரும் குடும்பவிருத்தி
சுத்தமுள்ளவீட்டு காரியமும்நன்மை
உன்னுடையஜென்மத்தை விட்டுராகு
ஒழிந்திடுவான்யின்னுமெட்டு தினத்திற்குள்ளே
தன்மையுடன்தொடுகுறியி னுண்மைபாரு
தப்பினால்சாஸ்திரத்தை சுட்டுப்போடே.

வ-ம். நீ தொட்டலக்கம் இருநூத்தி பன்னிரண்டாகையால் மனக்கவலைதீரும் தனலாபங்கிடைக்கும் குடும்பவிர்த்தியாகும் வீட்டுகாரியஞ் செயமாகும் உன்னுடையஜென்மத்தில் இராகுயிருக்கிறான் இன்னம் எட்டுதினத்தில் ஒழிகிறான்.

213-வது.

இருநூத்திபதிமூன்றைத்தொட்டதாலே
எத்தொழில்செய்தாலும் அதிகலாபம்
உறவற்றுபோனபொருள் வந்துசேரும்
உத்தமனேவெளியூரில் கிடைக்கும்லாபம்
தெரிவித்தேன்உனக்கெதிரி ஒருவனுண்டு
தம்பியடாஅவனையும்நீ நம்பவேண்டாம்

அறிவித்தேன்தைரியத்தை விடநீவேண்டாம்
அப்பனேபொருளொன்று நஷ்டமாமே.

வ-ம். நீ தொட்டகுறியால் லாபங்கிடைக்கும் கைவிட்டுப்போன பொருள்வரும் வெளியூரில் லாபங்கிடைக்கும் அதனால் உனக்குளதிரி ஒருவனுண்டு அவனை நம்பவேண்டாம் நீயுந்தைரியம் விடவேண்டாம் ஆனாலுனக்கு முன்னுதாய் ஒருபொருள் நஷ்டமாகவரும் அதற்கும் பயப்படவேண்டாம் பின்னால் லாபங்கிடைக்கும் உத்தமம்.

214-வது.

இருநூத்திப்பதினாலே தொட்டதாலே
எவ்வளவோ ஒருவருஷம் வருத்தப்பட்டாய்
குறைவின்றிகேட்டநாள் துடங்கியப்பா
கொற்றவனேயேழுநாள் கழிந்துதானால்
பிரியமுடன்ரெண்டாண்டு குறைவேயில்லை
பட்டதொருதுன்பமெல்லாம் விலகிப்போச்சு
மருமமெல்லாம்வழியாக சொன்னேனப்பா
மைந்தனேவிட்டதொழில் மகிழ்ந்துசெய்யே.

வ-ம். நீ தொட்டது என்னவென்றால் நீரொம்பவும் ஒருவருஷம் வருத்தப்பட்டாய் வருத்தம் நீங்கிவிட்டது இப்போது நீகேட்டநாள் தொடங்கி இன்னம் ஏழுநாள் கழிந்தால் இரண்டு வருஷம் குறைவில்லாமலிருப்பாய் நீமுன்செய்த தொழிலைவிட்டு இருக்கிறாய் அதை செய்யவும் சகலமும் நன்மையாகும் உத்தமம்.

221-வது.

மண்டலத்தின்தொடுகுறியின் மருமங்கேளீர்
மருமமாய்நினைத்தபொருள் முடியாதப்பா
விண்டதப்பாவெத்தொழிலும் பலியாதென்று
வீணாகபலர்சொல்லை கேட்கவேண்டாம்
சண்டையதுசினேகிதத்தில் நேருமப்பா
சனியனுடகூத்தாலே உந்தனுக்கு
கண்டதொருயிம்மாதங் கழிந்துதானால்
கண்மணியேகவலையெல்லாங் கடந்துபோமே.

வ-ம். நீ தொட்டகுறி இருநூத்தி இருபத்தொன்றானதால் நினைத்தகாரியம் கைகூடாது எந்தவேலைசெய்தாலும் பலியாது ஒருவர் சொல்லை கேழ்க்கவேண்டாம் சிநேகிதகாரியத்தில் சண்டையாகும் ஆனால் நீ கேட்டநாள் துடங்கி முப்பதுநாள்போனால் பலிக்கும் மத்திமம்.

222-வது.

தொட்டதோர்குறியினாலே துன்பமும்மிகவுண்டாகும்
மட்டதுவெடுத்தவேலை மத்திமம்பாபம்நேரும்

கெட்டதோர்யெண்ணமுந்தான் கருத்தினில்கூடிவாழும்
விட்டிட அந்தயெண்ணம் வெகுசுகமென்றார்முன்னோர்

வ-ம், நீ இருநூத்தி இருபத்திரெண்டை தொட்டதால் எந்த வேலைசெய்தாலுங்கைகூடாது அபாயம்வரும் உன்மனதில் கெட்ட எண்ணமிருக்கிறது அந்த எண்ணத்தை விட்டுவிடு சுகம்.

223-வது.

தொட்டதோர்குறியினாலே தொலைந்தது துன்பமெல்லாம்
விட்டதுகிரகமெல்லாம் வந்ததுநல்லகாலம்
சட்டெனபதறவேண்டாம் சகலமுங்கைதான்கூடும்
பொட்டெனவுரைத்தவாக்கை புத்தியில்மதித்துப்பாரே.

வ-ம். நீ தொட்டகுறி இருநூத்தி இருபத்தி மூன்றுகையால் நினைத்தகாரியஞ்செயமாகும் உன்னுடைய கிரகமெல்லாம் நன்றாயிருக்கிறது தனலாபங்கிடைக்கும் குறைவில்லை உத்தமம்.

224-வது.

எண்ணியேதொட்டலக்கம் எடுத்ததோர்வேலைசாயும்
நண்ணியேஒருவருக்கு நல்லுபகாரஞ்செய்ய
பண்ணினயெண்ணந்தன்னை பகர்ந்துநீயறிந்துசொல்ல
திண்ணமும்வாராதப்பா ஜெயமதுபலிக்கும்பாரே.

வ-ம். இருநூத்தியிருபத்தினாலைத்தொட்டதால் அட்டியில்லாமல் எடுத்தவேலைமுடியும் ஆனால் நீ ஒருவருக்கு உபகாரஞ்செய்ய எத்தனித்திருக்கிறாய் அதை ஆலோசித்துசெய்யவும் நன்மையாகும்.

231-வது.

பலித்ததுதொட்டலக்கம் பகையதுதொலைந்துபோச்சி
செலித்ததுநினைத்தவேலை கொஞ்சநாள்கழியக்கூடும்
சலித்திடவேண்டாமைபா சாஸ்திரமொழியைப்பாரு
நிலைத்திதைநம்பினோர்க்கு நாளுமென்சுகமென்றாரே.

வ-ம். இருநூத்தி முப்பத்தொன்றை தொட்டதால் நினைத்தகாரியஞ்செயமாகும் நீ ஒருகாரியத்தைப்பற்றி நினைத்திருக்கிறாய் அது இன்னங் கொஞ்சநாளில் கைகூடும் பயப்படவேண்டாம் உத்தமம்.

232-வது.

இக்கட்டுந்தொலைந்துபோச்சி எடுத்ததோர்பேரஞ்சாயும்
திக்கெட்டுங்கீர்த்திபெற்ற தீரமுமிகவுண்டாகும்
பக்குவமானவீட்டில் பலித்ததுன்கிரகமெல்லாம்
சிக்கெனவாழ்ந்தையானால் செல்வமும்பெருகுமென்றார்.

வ-ம். நீ தொட்டது இருநூத்தி முப்பத்திரண்டாகையால் மனவருத்தம் நீங்கிவிட்டது செயகாலமுதவியாச்சு கிரகங்கள் நல்ல வீட்டிலிருக்கிறது தனலாபங்கிடைக்கும் உபாயமாய்வரவும்.

233-வது.

அறிந்திடுவாய்நீதொட்ட குறியின்வுண்மை
அலட்டுதப்பாவுன்மனதில் விசனமொன்று
தெரிந்திடுவாய்வெளியூரின் விசனமொன்று
தக்கசினேகிதன்பிரிந்த விசனமொன்று
துறந்திடுவாயின்னொருவன் சினேகமானன்
துஷ்டனப்பாவுனக்கெதிரி அவனேயாகும்
பிரிந்திடுவாய் அவனையுநீ விட்டுநீக்கு
பேசியதுன்பமெல்லாம் விலகிப்போமே.

வ-ம். நீ தொட்டகுறி இருநூத்திமுப்பத்தி மூன்றாகையால் உன் மனதில்விசனமொன்றயிருக்கிறது ஆனால் இப்போது ஒருசினேகிதனைப்பிரிந்த விசனமொன்றயிருக்கிறது ஆனால் இப்போது ஒருசினேகிதனைக் கூடியிருக்கிறாய் அவன் உனக்கு எதிரியா யிருக்கிறான் அந்த சினேகிதத்தைவிட்டு நீங்கவும் பலிக்கும்.

234-வது.

ஜெயமதுபலித்துப்போச்சி சித்தமும்கலங்கவேண்டாம்
நயமுடன்யிரண்டுபக்கம் லாபமுங்கிடைக்குமப்பா
தயவதுவுள்ளோன்நல்ல தர்மவான்சினேகமாவான்
பயமதுயில்லைசத்துரு பாவியுந்துலைவானென்றார்.

வ-ம். இருநூத்திமுப்பத்தினாலேதொட்டதால் உனக்கு இரண்டு பக்கமும் லாபங்கிடைக்கும் நல்ல சினேகிதர்கூடுவார் அதினால் உன் மனக்கவலைதீரும் உன்சத்துரு நாசமாவான் ஜெயமாகும்.

241-வது.

கேளப்பாதொட்டதொரு குறியைசொல்வேன்
கண்மணியேவிவாகத்தின் விசனமொன்று
கேளப்பாவெளியூரின் விசனமொன்று
கருத்துள்ளசினேகிதன்மேல் விசனமொன்று
கேளப்பாவுன்னுடைய குடும்பந்தானே
கெடுதிசெய்யவுனக்கெதிரி ஒருவனுண்டு
கேளப்பா அவனைநீ விலக்கிவிட்டால்
கவலையெல்லாமொழிந்துசுகப் படுவாய்தானே.

வ-ம். நீ தொட்டகுறி இருநூத்திநாற்பத்தினாலாகையால் உனக்கு விவாகத்தின்விசனமொன்று இன்னம் உன்குடும்பத்தில் ஒருவன் யிருக்கிறான் அவன்கெட்டயெண்ணம் வைத்திருக்கிறான் அவனை நீக்கினால் சுகப்படுவாய் நம்பு.

242-வது.

குறைவதுயில்லையென்று கூறியமொழியைநம்பு
பெருமையாய்விட்டிற்சொன்ன பேச்சதுமுடியுமப்பா

மருமமுங்கவலைதீரும் மாற்றலர் தன்னைக்கொண்டு
வருவனயோசித்தாலுந் தாட்டியாய்முடியுந்தானே.

வ-ம். நீ தொட்டலக்கம் இருநூற்றி நாற்பத்திரண்டாகையால் மனக்கவலைதீரும் வீட்டில் யோசித்தகாரியம் ஜெயமாகும் இல்லாவிட்டால் இன்னம் யாரையாவது கொண்டு யோசித்தாலும் முடியும் எதிரி நாசமாவான்.

243-வது.

இருநூற்றிநாற்பத்திமூன்றைதொட்டதால்
எத்தொழிலைச்செய்தாலும்பலிக்குமப்பா
தருணத்தில்தனலாபந்தேகாரோக்கியம்
தம்பியடாவிட்டகாரியமுமாகும்
அறியவேவுத்தியோகம்புத்திரபாக்கியம்
அப்பனே தடையன்றியாகுமப்பா
தெரியவேதைரியத்தைவிடவேவேண்டாம்
தடையின்றிநினைத்ததொழில்செய்துபாரே.

வ-ம். நீதொட்ட சாஸ்திரத்தில் புத்திரபாக்கியம் உண்டாகும் தேகசவுக்கியமாகும் உத்தியோகங்கிடைக்குந் தனலாபங்கிடைக்கும் எந்தவேலை செய்தாலுஞ் செயமாகும் விபரித்து செய்யலாம் தைரியம் விடவேவேண்டாம்.

244-வது.

சித்தமதுகலங்காதே அப்பாகேளு
செல்வமதுபெருகுமடா தொட்டலக்கம்
உத்தமனேகிரகங்கள் பலனைக்கூட்டும்
உறவுகொண்டசினேகிதனை நம்பவேண்டாம்
பத்தியவன்உனக்கெடுக்க யெண்ணங்கொள்வான்
பாலகனே அவனுறவைநீக்கிவிட்டால்
எத்தொழிலைச்செய்தாலும் பலிக்குமென்று
பியம்பியசகாதேவர் நூலைநம்பே.

வ-ம். நீதொட்டலக்கம் இருநூற்றி நாற்பத்திநாலாகையால் உன்பீடைதுலைந்துபோச்சி கிரகங்கள் நல்லதாயிருக்கின்றது நீ ஒருவனை நம்பியிருக்கிறாய் அவன் மனதில் கெட்டயெண்ணம் வைத்திருக்கிறான் அவனை நம்பவேண்டாம் உன்மனம்போலேசெய்தால் பலிக்குங் குறையில்லை.

311-வது.

பாலகனேதொட்டலக்கம் பணத்தினிடவிசனமொன்று
சாலவுனக்குமெத்தசஞ்சலம் வெளியூராலே
சீலமாம்குலதேவதைக்கு சிறப்புடன்பூசைசெய்ய
மேலதுபெருவாயப்பா மர்மமும்வெளியாய்சொன்னேன்.

வ-ம். நீதொட்டலக்கம் முன்னூத்திபதினொன்றாகையகல் உனக்கு பணத்தினிடவிசனமொன்றுயிருக்கிறது வெளியூர்விசனமொன்றிருக்கிறது அதுகளெல்லாந்துலைவதற்கு உன்னுடைய குலதேவதைக்கு பூசைபோடு கைகூடும்.

312-வது.

மனமதுகவலைவேண்டாம் மருவியபொருளுஞ்சேருங்
கனமுடன்குடும்பவிர்த்தி களிப்புறபுத்திரருண்டு
வினைமுதல்மெய்யில்வாழும் வியாதியும்பறந்துபோகும்
இனமுடன்தொட்டவேலை யேகமாய்பலிக்கும்பாரே.

வ-ம். முந்நூற்றி பனிரெண்டை தொட்டதால் மனக்கவலைதீரும் தனலாபங்கிடைக்கும் குடும்பவிர்த்தியாகும் புத்திரலாபமுண்டு திரேகத்தின் வியாதிதீரும் எந்தத்தொழிலைசெய்தாலும் பலிக்கும் தைரியம் விடவேண்டாம் உத்தமம்.

313-வது.

பணமென்றஆசையது மெத்தவுண்டு
பலிக்குமடாநினைத்தபடி பயப்படாதே
குணமில்லாவுனக்கெதிரி யனேகருண்டு
கோடிபேரெதிர்த்தாலு முனக்கேலாபம்
மனமறியஉந்தன்குல தேவதைக்கு
மாதமொருபூசையது புரிந்தாயானல்
யினமாகசகலமுந்தான் மனம்போல்கூடும்
யேதொன்றுமஞ்சாதே யீசன்சாட்சி.

வ-ம். நீ முந்நூத்திப்பதிமூன்றை தொட்டதால் உனக்கு பணத்தினிட ஆசையிருக்கின்றது அதுதடையில்லாமல்பலிக்கும் ஆனல் உனக்கு லாபங்கிடைக்கும் நீ உன்குலதேவதைக்கு மாதத்திற்கொரு பூசைபோடு கைகூடும் உத்தமம்.

314-வது.

உன்னிடகிரகநன்மை உடனேமுன்விவாகங்கூடும்
தன்னிகராகவாழ்வாய் தர்மமுமனதிலெண்ணு
விண்ணவருதவியுண்டு வழுத்திடும்சோமவாரம்
எண்ணியேவிரதங்கார்க்க எத்தொழில்பலிக்குமென்றூர்.

வ-ம். நீ முன்னூத்திபதினலை தொட்டதால் நினைத்தகாரியம்முடியும் கலியாணங்கூடும் சம்பத்தாய் வாழ்வாய் தர்மம்பண்ணு நீ திங்கட்கிழமைதோறும் விரதமிரு ஈஸ்பரன் துணையிருப்பார்.

321-வது.

வருத்தமுமிகவுண்டாகும் வாடியேமெய்யுஞ்சோருங்
கருத்துடன்வெதைசெய்தாலும் கைப்பொருள்விரயமாகும்
இருபத்தியொன்றுமாதம் யேகபின்சுகமுண்டாகும்
தெரிவித்தமொழியைநம்பி தைரியங்கொண்டுநீயே.

வ-ம். முந்நூத்தியிருபத்தி யொன்றைதொட்டதால் மனவருத் தமாயிருக்கிறாய் நினைத்தகாரியம் மத்திபம் துணிவாய் ஒருதொழில் செய்தாலும் நஷ்டம் எந்தவேலைசெய்தாலும் விசாரித்துசெய் உனக் கு யிருபத்தொருமாதம் போனபிறகு சுகமாகும் மத்திபம்.

322-வது.

உள்ளத்தின்கவலைதீரும் உன்னுடன்பிறந்தோராலே
தெள்ளியலாபஞ்சேரும் திறமுடன்வருஷந்தன்னில்
கள்ளமுமில்லைசொன்னேன் கையதுவிட்டவேலை
வள்ளலின்கிருபையாலே வருகுமென்றுரைத்திட்டாரே.

வ-ம். நீ தொட்டலக்கம் முந்நூத்தியிருபத்திரண்டாகையால் நி னைத்தகாரியம் அண்ணன்தம்பியால் முடியும் இந்தவருஷத்தில் காரி யஞ்சித்தியாகும் போனவேலைவரும் நீ எத்தனஞ்செய் உத்தமம்.

323-வது.

சந்தேகமில்லைசொன்னேன் சார்ந்திடும்வெளியூர்லாபம்
வந்திடும்யெதிரிநாசம் வருத்தமுங்கவலைதீரும்
சிந்தையுங்களிக்கநீயுஞ் சொல்லடையாளங்கேளு
அந்தமாயிடதுகண்மேல் ஆனதோர்மச்சம்பாரே.

வ-ம். நீ முந்நூத்தியிருபத்திமூன்றை தொட்டதால் எதிராளி யைவெல்வாய் மனக்கவலைதீரும் வெளியூரிலிருந்து லாபங்கிடைக்கும் குலதேவதைக்கு பூசைபோடவும் இதற்கடையாளம் உன்னுடைய இடதுகண்மேல் மச்சமிருக்கிறது.

324-வது.

பகைவனுந்துலைந்துவிட்டான் பலித்திடும்லாபம்மேலாய்
வகையுடன்கெலிப்பாய்சண்டை வந்ததோரெண்ணஞ்சாயும்
தகமையாய்தர்மம்பண்ணு தனித்திடபகையும்வேண்டாம்
யுகமதைகடந்தமுன்னோர் உரைத்தசொல்நம்பிப்பாரே.

வ-ம். நீ முந்நூத்தி யிருபத்திநாலைதொட்டதால் பகையாளி து லைந்துவிட்டான் நினைத்தகாரியம் முடியும் சண்டை கெலிப்பாய் தர் மம்பண்ணு ஒருவரையும்பகைக்கவேண்டாம் முன்னோரெழுதின நூ லை நம்பு.

331-வது.

நாடியேதொட்டலக்கம் நம்பினயெண்ணஞ்சாயுங்
கூடியேலாபங்காணுங் குடும்பமும்விர்த்தியாகும்
தேடியேமனையாள்செய்யுந் தர்மமுமுனக்கேலாபம்
வாடிடவேண்டாமுன்னோர் வயித்தியநூலைநம்பே.

வ-ம். நீ தொட்டலக்கம் மூன்னூத்திமுப்பத்தொன்றுகையால் நினைத்தகாரியஞ்செயமாகும் லாபங்கிடைக்கும் குடும்பவிர்த்தியாகும் நீதர்மவானுயிருப்பாய் தைரியம்விடவேண்டாம் உன்பெண்சாதிசெய்கிற தர்மமுனக்கு சித்தியாகும் சுபம் உத்தமம்.

332-வது.

எண்ணமுடியாதின்ன மெத்தொழில்பலித்திடாது
நண்ணியிரண்டுவூண்டாய் நவிலொணுநஷ்டம்பட்டாய்
உன்னிடசேர்ந்தானும் உனக்கெதிர்வைரியானுன்
மன்னனேவுண்மைசொன்னேன் மனமதுகலங்கிடாதே.

வ-ம். நீமூன்னூத்திமுப்பத்திரண்டைதொட்டதால் நினைத்தகாரியமாகாது எந்தவேலைசெய்தாலும்நஷ்டம் உன்சினேகிதனே உனக்கு வைரியாயிருக்கிறுன் தைரியம்விடாதே மத்தியம் இரண்டுவருஷமாய் ரொம்பவுங் கஷ்டப்பட்டாய்.

333-வது.

நினைத்ததோர்வேலைசாயும் நம்பிநீதொட்டலக்கம்
கனத்ததோர்சினேகங்கூடுங் கடவுளின்கிருபையாலே
மனத்திடங்கொள்ளநீதான் மைந்தனேகுலதேவதைக்கு
இனமுடன்பூசைசெய்ய ஏந்துவாய்புத்திரலாபம்.

வ-ம். தொட்டகுறியால் லாபங்கிடைக்கும் நினைத்தகாரியம்முடியும் நல்லசினேகிதங்கூடும் புத்திரபாக்கியமுண்டு குலதேவதைக்கு பூசைபோடவும் உத்தமம்.

334-வது.

பலபலவெண்ணவேண்டாம் பாலாநீதொட்டலக்கம்
கலகலவெனவேலாபங் கைதனில்வந்துகூடும்
சிலபெரியோர்களாலே சினேகிதம்வந்துகூடும்
நலமதுமனதில்கொண்ட நாட்டமும்பலிக்கும்பாரே.

வ-ம். நீ முன்னூத்தி முப்பத்தினுலை தொட்டதால் மனதில் நினைத்தகாரியம் முடியும் கைவிட்டுப்போன பொருள் வரும் தனலாபங்கிடைக்கும் நல்ல சினேகிதரால் உதவியாகும் பலயோசனைவேண்டாம்.

341-வது.

உன்னிடமனதில்மெத்த உறுகுதுவிசனமொன்று
பின்னியேபித்தவாய்வு பிரட்டுதுதிரேகமெல்லாம்
சொன்னசொல்தவறிடாதே சிவனைநீதியானஞ்செய்தால்
கன்னியேபுத்திரலாபம் நலந்தரும்பின்னுலென்றார்.

வ-ம். மூன்றூத்திநாற்பத்தொன்றை தொட்டதால் உன்மனதில் விசனமொன்றிருக்கிறது இன்னம் உடம்பில் பித்தவாய்வு தங்கி

யிருக்கிறது நீ சிவனைத்தியானஞ்செய் சகலமுந்துலையும் புத்திரலாப முண்டாகும் இதுனா பின்னால்சுகம் உத்தமம் பயப்படவேண்டாம்.

342-வது.

நினைத்ததோ ரெண்ணஞ்சாயு நம்பிடுமேற்கு திக்கில்
தனத்துடன் லாபங்காணுந் தளர்ந்தமுன் கஷ்டந்தீரும்
மனதிடங் கொள்வாய்நீயும் மர்மமும்வெளியாய்ச் சொன்னேன்
இனமுட னிரண்டுமாதம் யேகபின் சுகமுண்டாமே.

வ-ம். முந்நூற்றிநாற்பத்திரண்டைத் தொட்டதால் நினைத்தகாரியஞ்சித்தியாகும் மேற்குதிசையில் லாபமுண்டு நீபடுங்கஷ்டந்தீரும் இன்னமிரண்டு மாதத்தில் சுகமாகும் உத்தமம் பயப்படவேண்டாம்.

343-வது.

கோபஞ்சண்டாளங்கொண்டு கூடியபொருளைத்தோற்றாய்
தாபமும்வேண்டாமப்பா தானதுவந்துகூடுஞ்
சாபமாய்வெகுநாளாக சஞ்சலப்பட்டுவந்தாய்
லாபமும்பெறுவாயைந்து மாதமுங்கழிந்துபாரே.

வ-ம். முந்நூற்றிநாற்பத்தி மூன்றைத்தொட்டதால் மனக்கோபத்தினால் கைவிட்டுப்போன பொருள்வரும் நீ ரொம்பநாள் துன்பப்பட்டுக்கொண்டுவந்தாய் இன்னும் ஐந்துமாதம்போனால் சுகப்படுவாய் அதுபரியந்தம் நீ நினைத்தவேலையைச் செய் ஜெயமாகும் பயப்படவேண்டாம்.

344-வது.

எண்ணமும்பலிக்குமப்பா யெத்தொழில்லாபங்காணும்
திண்ணமாய்விட்டநேசர் திரும்பியும்வந்துகூடும்
வண்ணமாய்ஸ்திரீயினாலே வாழ்வதுமிகவுண்டாகும்
உண்மையாயிதனைநம்பு ஒருவர்மேற்பகைகொள்ளாதே.

வ-ம். நீ முந்நூற்றி நாற்பத்திநான்கைத் தொட்டதால் உன் பீடை துலைந்துவிட்டது எந்தவேலை செய்தாலும் லாபங்கிடைக்கும் ஒரு சிநேகிதனைப் பிரிந்திருக்கிறாய் அவன் மறுபடியுஞ்சிநேகமாவான் இன்னும் ஒருஸ்திரீயினால் சௌக்கியமுண்டாகும் உன் பகையாளி நாசமாவான் ஆனால் நீ ஒருவரையும் நிஷ்டூரஞ்செய்துக் கொள்ளாதே உத்தமம்.

411-வது.

கஷ்டமு மிகவேதோணுங் காண்பது நிராசையாகும்
துஷ்டரின் சிநேகத்தாலே ரோஷமாய் பகையுநேரும்
நஷ்டமா மிவைகளெல்லாம் நடாமல் விலக்கியோடும்
இஷ்டமாங் குலதேவதைக்கு யியல்புடன் பூசைசெய்வாய்.

வ-ம். நானூற்றி பதினொன்றைத் தொட்டதால் நினைத்தகாரிய ம் கைகூடாது ஆசை நிராசையாகும் ஒரு சினேகிதனால் அபாயம் வரும் அவனை நம்பவேண்டாம் நீ உன் குலதேவதைக்குப் பூசை செய் ய நாளுக்கு நாள் கைகூடும் மத்திமம்.

412-வது.

கன்னியினாசையாலே கவலையும்படுகிறாய்நீ
இன்னமுஞ்சிலநாள்போனால் யிஷ்டத்தின்படியேகூடும்
தன்னிகராகவேதான் தரித்திடும்புத்ரலாபம்
உன்னிடகுலதேவதைக்கு வுகந்துநீபூசைசெய்யே.

வ-ம். நீ தொட்டலக்கம் நானூற்றிபனிரெண்டாகையால் நினை த்தகாரியம் கைகூடும் ஒரு ஸ்திரீசம்பத்தைப்பற்றி விசனப்படுகிறாய் அதுயின்னம் கொஞ்சதினத்திற்குள் கைகூடும் புத்திரலாபமாகும் குலதேவதைக்குப் பூசைசெய்யவும்.

413-வது.

நித்தமும் பணத்தினாசை நீடியுண்மனதில் வாட்டும்
உத்தம ஸ்திரீயினாலே வுதவியாம் பொருளுஞ்சேரும்
பத்திய கிரகநன்மை பலத்ததோர் சினேகங்கூடுஞ்
சித்தியாம் ஜாதகத்தில் சொல்மொழி தப்பிப்போச்சே.

வ-ம். நீ தொட்டலக்கத்தின் விபரங்கேள் உனக்குபணத்தினு டைய விசனமொன்றிருக்கிறது ஒருஸ்திரீயால் பொருளுதவியாகி அ ந்த விசனந்தீரும் ஒருபெரியமனுஷரா லுதவியாகும் வெளியூரில் வே லைகிடைக்கும் ஆனால் உன்ஜாதகம் ஒன்று தப்பி யிருக்கிறது உத்த மம்.

414-வது.

பட்டவுன் துன்பந்தன்னை பகர்ந்திட முடியாதப்பா
தொட்டதோர் கிரமம்போச்சு துணையது யினிமேலாச்சு
இட்டமாய் மனதிற்கொண்ட யெண்ணமும் ஒருமாதத்தில்
கெட்டியாய் பலிக்குமென்றே காண்டீபன் தம்பிசொன்னார்.

வ-ம். நீ மிகவும் வருத்தப்பட்டாய் அந்த வருத்தம் நீங்கிவிட்ட து ஆனாலுன்மனதில் ஒருயெண்ணம் வைத்திருக்கிறாய் அது இன்னு ம் ஒருமாதத்தில் கைகூடும், குலதேவதைக்குப் பூசைசெய்யவும், இந் நூல் பஞ்சவர்களில் ஒருவராகியசகாதேவர் சொன்னது உத்தமம்.

412-வது.

பொருளது கைவிட்டேகி புலம்பிநீ வாடுகின்றாய்
அருளுடன் வந்துசேரும் அயலூரில் பலனைக்காட்டும்
மறுமொழி கவலைவேண்டா மைந்தனைப் பெற்றுவாழ்வாய்
குருமொழி யாகநம்பி குறிப்பைநீ யறிந்துகொள்ளே.

வ-ம். நீ தொட்டது என்னவென்றால் கைவிட்டுப்போனபொருளைப்பற்றி விசனப்படுகிறாய் அது கைகூடும் வெளியூரிலுதவியாகும் புத்திரலாபமாகும் விசனப்படவேண்டாம்.

422-வது.

சென்றதோர் வருடமூன்றுஞ் சிறுமையால் மெய்யதாகும்
இன்றுடன் பீடையெல்லாம் ஒழிந்திடும் பயப்படாதே
நன்றென வெடுத்தவேலை நம்பிசெய் கவலைவேண்டாம்
வென்றுநீ வாழ்வாயப்பா வேணதோர் புத்ரரோடே.

வ-ம். நீ மூன்றுவருஷமாய் மிகவும் வருத்தப்பட்டாய் அந்த வருத்தம் நீங்கிவிட்டது எந்தவேலைசெய்தாலும் பலிக்கும் விசாரித்துசெய் பயப்படாதே புத்ரல பமுண்டு குலதேவதைக்குப் பூசை செய்.

423-வது.

குறைவதுவில்லைசொன்னேன் கொண்டதோரெண்ணஞ்சாயும்
பெருகுவாயதிகலாபம் பின்னொருபயமும்வேண்டாம்
திறமுடன்யெத்தொழிலும் தீரமாய்ச்செய்வாயானால்
அறியவேபலிக்குஞ்சொன்னே னையன்தன் அருளினாலே.

வ-ம். நீ நினைத்தகாரியம் முடியும் எந்ததொழில்செய்தாலும் அதிகலாபங்காணும், விசாரித்துசெய்பயப்படவேண்டாம் உத்தமம்.

424-வது.

நம்பினயெண்ணமெல்லாம் நஷ்டத்திலொழிந்துபோச்சு
வெம்பியேவாடுகின்றாய் வீட்டிலுஞ்சுகமில்லாமல்
தெம்புடன்வாழப்போறாய் தைரியம்விடவேவேண்டாம்
உம்பரின்சாட்சியாக வுரைத்தசொல்நம்பிப்பாரே.

வ-ம். நீ தொட்ட லக்க மென்னவென்றால் மிகவும் வருத்தப்படுகிறாய் நினைத்தவேலையெல்லாம் நஷ்டமாய்விட்டது வீட்டிலுஞ் சுகமில்லை ஆனால் இனி சுகப்படுவாய் பயப்படவேண்டாம்.

431-வது.

பாலகனேபயப்படாதே பலித்திடும்நினைத்தவேலை
மேலெனஅண்ணன்தம்பி மகிழுடன்கூடுவார்கள்
காலமும்நல்லதாச்சு கிரகமும்விட்டுப்போசசு
சீலமாய்வாழ்வாயப்பா சந்தேகமில்லைதானே.

வ-ம். நீ நினைத்தகாரியஞ்சித்தியாகும் மனக்கவலைதீரும் அண்ணன் தம்பிவந்து கூடுவார்கள் உன் கிரகங்கள் நல்லதாயிருக்கிறது சந்தேகப்படவேண்டாம் உத்தமம்.

432-வது.

மனதில்நினைத்தவேலை மகிழுடன்வந்துகூடும்
தனமுமேவெளியூர்போக கருத்தினிலெண்ணங்கொண்டாய்

துணையெனநம்பவேண்டாம் துணிந்துசெய்மனதின்போல
குணமுடன்மனம்போலண்ணன் கூடுவதில்லையென்றூரே.

வ-ம். மனதில் நினைத்தவேலைமுடியும் நீவெளியூர்போக நினைத்திருக்கிறுய் தடையில்லாமற் போகலாம், ஒருவரையும் நம்பவேண்டாம், அண்ணன் தம்பியுடன் பகையாயிருக்கிறுய் உத்தமம்.

433-வது.

சங்கையுமில்லைசொன்னேன் சகலமும்கைதான்கூடும்
மங்களமாகவாழ்வாய் மற்றெருநேசராலே
பொங்கமாய்வீட்டுவேலை புகழ்ந்துமேமிகவுண்டாகும்
தங்கெனநாளுக்குநாள் தழைத்திடும்புத்ரலாபம்.

வ-ம். வியாபாரம் விர்த்தியாகும் தனலாபங்கிடைக்கும்நல்ல சினேகரால் வீட்டுகாரியம் நன்மையாகும் புத்திரலாபங் கிடைக்கும் பயப்படாதே நாளுக்குநாள் சகாயமாகும் நம்பு உத்தமம்.

434-வது.

கையதுகூடும்வேலை கஷ்டம்விலகிப்போச்சு
துய்யனேவுனதுவீட்டு துயரமுமினிமேலில்லை
ஐவரினிளையதம்பி அருள்சகாதேவர்வாக்கை
மெய்யெனநம்பிமாயன் மலரடிதுதிசெய்வாயே.

வ-ம். நினைத்தகாரியம் முடியும் வீட்டு கஷ்டமுந்தீரும் கடவுளைப் பூசைசெய்யவும் உத்தமம்.

441-வது.

கிரகமும்பொல்லாதப்பா கவலையுமிகவுண்டாகும்
பிரியமாய்த்தேடினவுன் பொருளதுவிலகிப்போச்சு
வருமெனவெண்ணம்வேண்டாம் வழித்திடும்மாதமேழில்
உரையதுதவறினக்கால் ஒங்கியீராண்டிலாமே.

வ-ம். நினைத்தகாரியம் மத்திபம் உன்கிரகம் கெட்டதாயிருக்கின்றது உன்கைவிட்டு ஒருபொருள்போயிற்று அந்தப்பொருள் வந்தால் ஏழுமாதத்திலாவது இரண்டு வருஷத்திலாவது வரவேணும் தைரியம் விடாதே.

442-வது.

நலியென்னும்பிணிதான்மெய்யில் நாளுமேயுன்னைவாட்டும்
சலியாமல்நீசெய்தர்மம் சகலமும்நன்மையாகும்
குலமெனுந்தேவதைக்கு கூட்டியேகிரகபூஜை
நலமுடன்செய்வையாகில் நாளுமேசுகமென்றூரே.

வ-ம். எப்போதும் உன் உடம்பு நலிந்திருக்கின்றது இருந்த போதிலும் உன்னுடைய தர்மம் காப்பாற்றுகின்றது இன்னும் நீ குலதேவதைக்கும் நவகிரகத்திற்கும் பூசைசெய்வாயாகில் சகலமும் நன்மையாகும் உத்தமம்.

443-வது.

முன்னுதாய்பலிக்கும்லாபம் முதல்வன்றன்கிருபையாலே
பின்னொருபொருளும்நஷ்டம் பிரிந்திடுமஞ்சிடாதே
இன்னொருமாதமட்டும் யிருக்குதுகெட்டகாலம்
பின்னிடசுகமேயென்று பேசியமொழியைநம்பே.

வ-ம். நீ நினைத்தகாரியம் பலிக்கும் பலித்தபோதிலும் ஒருபொருள் நஷ்டமாகும் கிரகங்கள் கெட்டதாயிருக்கிறது இன்னம் ஒருமாதங்கழிந்தால் சுகப்படும் தைரியம் விடவேண்டாம்.

444-வது.

ஜெயமுடனேயெத்தொழிலும் பலிக்குமப்பா
சிந்தையிலேபயமென்ற கவலைநீக்கு
நயம்பெறுவாய்பந்துவுடன் கூடிவாழு
நாட்டமாய்முன்செய்த தொழிலைநம்பி
தயவுடனே ஆராய்ந்து கிருபையாலே
தான்வாழ்வாயென்றுசகா தேவர்சொன்னார்
ஜெயமாகயிந்நூலை நம்பினோர்கள்
சிரஞ்சீவியாயுலகில் வாழ்வார்தானே.

வ-ம். நீ நானூற்றிநாற்பத்தினான்கைத்தொட்டதால் நினைத்தகாரியம் சித்தியாகும் உன்மனதில் பயமிருக்கிறது அந்தபயத்தை விட்டு விடவும் உன்பந்துக்களுடன் கூடிவாழவும் நலம் நீ முன்செய்த தொழிலைவிட்டிருக்கிறாய் அதைச்செய்யவும் சுகமாகும்.

தொடுகுறிசாஸ்திரம் முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

இராமதேவர் ஆஞ்சநேயருக்கு

உபதேசித்த

உத்தம மத்திய சாஸ்திரம்.



28	33	37	34	18	17
25	45	53	42	21	19
32	81	84	61	72	56
46	14	43	80	29	58
54	64	52	36	13	60
27	12	96	41	11	39

இந்த உத்தம மத்திய சாஸ்திரம் பார்க்கப்பட்டவர்கள் சிறு குழந்தைகள் கையில் ஓர் புஷ்பத்தைக்கொடுத்து புஷ்பத்தால்மேலே யிருக்கிற சக்கரத்தின் நெம்பரில் ஏதாகிலும் ஒன்றைதொடச்சொல்லி அந்த நெம்பர்பிரகாரம் எடுத்து வாசித்துப்பாத்தால் நன்மை தீமை எலிதில் அறிந்துக்கொள்ளலாம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

உத்தம மத்திப சாஸ்திரம்.

11 ராமர் சுக்ரீபனுக்குப் பட்டங்கட்டுதல் இது உத்தமம். 1

12 இராவணன் சீதையை சிறையெடுத்தயிடம் நினைத்த காரியம் தாமிஷத்தில் முடியும். 2

13 கலைக்கோட்டு மகாமுனிவர் புத்திரகாமேஷ்டியாகஞ் செய்தது இது உத்தமம். 3

14 இராவணன் ஜடாயுபட்சியை மடக்கிப் போர்செய்து கெலிக்காமல் தோற்படைந்தவிடம் இது ஆகாது மத்திபம். 4

17 கைகேசியின் சொற்படி ராமர் சீதாலட்சுமணசமேதராய் வனமேகுதல் இது மத்திபம். 5

18 அநுமா ரசோகவனத்தையழித்தயிடம் இது ஆகாதுமத்திபம்.

19 இராவணனை சீதையம்மன் நிந்தித்தல் இது ஆகாது மத்திபம்.

21 கிருஷ்ணசுவாமி பவளக்கொடியாள் பாளையத்தை கதண்டு கொட்டி மாளச்செய்வது மத்திபம். 8

22 அநுமார் எழுபதுவெள்ளம் சேனையை ஓடிமடக்கி மிஞ்சாதேயென்று நிறுத்தினவிடம் ஆகையாலிது நன்று. 9

27 சீதாதேவி சிறையிருந்தவிடம் இது ஆகாது நினைத்தகாரியம் பலியாது மத்திபம். 10

28 ராமர் ஆஞ்சநேயருக்கு இரகசியம் உபதேசித்தயிடம் இதுஉத்தமம். 11

29 ஆஞ்சநேயர் சஞ்சீவிமலையைக் கொண்டுவரப்போகுதல் ஆகையால் நினைத்தகாரியம் துன்பத்தைத்தரும். இது மத்திபம்.

32 இராமசுவாமி வனவாசம் போனவிடம் ஆகையால் மனதில்நினைத்தகாரியம் அனுகூலமாகாது மத்திபம். 13

33 இராமசுவாமியும் இலட்சுமணரும் இரகசியம் பேசினயிடம் இது மகா உத்தமம். 14

34 இராமர் சீதாதேவியைப் பறிகொடுத்து மனம் வியாகூலமாய் நின்றயிடம் இது மத்திபம். 15

36 அநுமார் அசோகவனத்திற்போய் சீதையைக்கண்டு திருவாழிமோதிரங்கொடுத்தயிடம் ஆகையால் இதுநல்லதுஉத்தமம்.

37 விபீஷணனுக்குப் பட்டங்கட்டினயிடம் இது மகாநல்லது நினைத்தகாரியம் ஜெயமுண்டு உத்தமம். 17

39 அநுமார் பரதமகாராஜனுக்கு இராமர் வருதலை உரைத்தல் ஆகையால் நினைத்தகாரியம் தாமிஷத்தில் முடியும். 18

41 ராமர் சீதாதேவியைக் காணாமல் மனம்திகைத்து நின்றயிடம் ஆகையால் நினைத்தகாரியம் துயருண்டு எதிரியாலே பகையும் பொல்லாங்கும் வரும் ஜெயமில்லை. 19

42 இலட்சுமணப் பெருமாள் இந்திரஜித்தை ஜெயம்பண்ணினவிடம் இது மகா உத்தமம். 20

43 ராமர் மிதிலைக்கு விஸ்வாமித்திரரோடு போகும்போது கற்சிலையை பெண்ணாக்கினவிடம் இதுமிகவும் நல்லது நினைத்த காரியம் சித்தியாகும் உத்தமம். 21

45 இராமசுவாமிக்கும் சுக்ரீபனுக்கும் வாக்குவாதமானவிட இது மகா உத்தமம். 22

46 அனுமார் லங்காபுரியை தீயிட்ட விடம் மத்திபம். 23

52 இராமருக்கும் பரசுராமருக்கும் தர்க்கம் நடந்தயிடம். 24

53 இராவணன் சீதையை யெடுத்துக்கொண்டு போனவிடம் இது மத்திபம். 25

54 வால்மீகிவனத்தில் இராமசுவாமிவனபோஜனஞ் செய்தவிடம் இது மகாநல்லது நினைத்தகாரியம் சீக்கிரம் கைகூடும் உத்தமம். 26

56 இந்திரஜித்துவிட்ட பிர்மாஸ்திரத்தால் லட்சுமணர்முதல் சகலரும் மூர்ச்சையடைதல் இது ஆகாது மத்திபம். 27

58 இராவணனுக்கும் சுக்ரீவனுக்கும் மல்யுத்தம் இது நன்றல்ல ஆகையால் நினைத்தகாரியம் தாமஷத்தில் அனுகூலமாகும். 28

60 ஸ்ரீராமருக்குப் பட்டாபிஷேகமாகுதல் இது மகாநல்லது. 29

61 இராமர் சீதாதேவியை சிறைமீட்டயிடம் இது தாமதத்தில் காரியம் அனுகூலமாகும். 30

64 இராமசுவாமி தாடகையை ஜெயித்தயிடம் இதனால் அநேக காரியம் அனுகூலமாகும் உத்தமம். 31

72 ராமர்கையால் கும்பகர்னன்மாண்டவிடம் நன்றல்ல மத்திபம்.

80 ராமருக்கும் சீதைக்கும் கலியாணமானயிடம் இது மகா நல்லது உத்தமம். 33

81 அங்கதன் தூதுபோனவிடம் இதுவெகுலாபமுண்டு உத்தமம்.

84 இராவணன் சீதாதேவியைச் சிறையில்வைத்தயிடம் நினைத்தகாரியம் ஜெயமில்லை பயமுண்டு பகையாளிகளாலே கெடுதியுண்டு இது ஆகாது மத்திபம். 35

96 இராமசுவாமி தபசுபண்ணினவிடம் இக்காரியம் ஆலசியத்தில் அனுகூலமாகும். 36

உத்தம மத்திப சாஸ்திரம் முற்றிற்று.

அநுபவமானது !! பிரசித்தியடைந்தது !! சஞ்சீவிபோன்றது !!

அயக்காந்த திராவகம்.

மித்திரர்களே ! இந்த அபூர்வமருந்தானது அநேக கொடியவியாதிகளை ஆச்சரியமாய் கண்டிக்கக்கூடியது. இதை அனேக ஆயிரங்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர் வியாதியினாலாவது கெட்ட சகவாசத்தினாலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிர்த்திதருவதில் இது நிகரற்ற மருந்தாகும் ஆங்கிலேயமுறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையானமருந்து சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல்நோய்கண்டு அவஸ்தைப்படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டேவேளையில் ஆச்சரியமான சுகத்தையடைவார்கள். இதனால் தீரக்கூடியஅநேகவியாதிகளில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.

நரைத்தமயிரைக் கறுப்பாக்கும். உஷ்ணத்தினாலாவது புழுவெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும். நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல்கைகால்காந்தல் இவைதீரும். முகவசீகரத்தை உண்டாக்கும், தேகஅசதியையோட்டும் ஜீரணசக்தியையும் நல்லபசியையும் உண்டாக்கும். மனதை அதிகஉற்சாகப்படுத்தும். நரம்புகளுக்கு அதிகவலுவைத்தரும். தேகத்தில்நல்ல இரத்தத்தைச் சுரப்பிக்கும். க்ஷயரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும், வாதபித்த சிலேத்துமத்தாலுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சத்ததாதுகளுக்கும் நல்ல பலத்தைத்தரும். மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல்இவைதீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போசனத்துடன் 20-நாள் சாப்பிட்டால்இணையில்லாத ஆனந்தத்தைத்தரும். இழந்துபோனதேகதிடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறுமருந்தே கிடையாது. 40-நாள் மருந்துஉட்கொள்ளும் பக்ஷத்தில் வியாதி என்பதே அம்மனிதனின் நிழலைக்கூட அணுகாது. தேகம் வஜ்ஜிரமேயாகும். இதற்கு யாதொரு பத்தியமுங் கிடையாது.

இந்த திராவகத்தை உட்கொள்ளவேண்டிய முறை.

அரிக்கால் ஆழாக்கு சுத்தஜலத்தில் திராவகத்தை 5-துளி அல்லது7-துளி அதில்விட்டுக் கலக்கிக் குடித்துவிடவேண்டும். பத்தியமே கிடையாது இதைப்பற்றியவிவரங்கள் பார்சலோடு வைத்துவரும்.

அரைமண்டலம் 20-நாளைக்கு வரக்கூடிய ஒருபுட்டியின் விலை
ரூபா 1 4 0 டஜன் 1-க்கு ரூபா—12.

ஒருமண்டலம் 40-நாளைக்கு வரக்கூடிய ஒரு புட்டியின் விலை
ரூபா 2 0 0 டசன் 1-க்கு ரூபா—21.

இப்படிக்கு,

பி. நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்,
பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.